## கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் முத்திரைப் பணியகமும் ஒருங்கிணைந்து நடாத்தும் நாடளாவிய நத்தார் தபால் முத்திரை சித்திரப் போட்டி – 2025

**ஆக்கங்கள் (சித்திரம்) சமர்ப்பிக்கப்படவேண்டிய தலைப்புகள்**

“பசுக்கள் கூட்டமும் தேவ கானமும் நட்சத்திரம் உலகிற்கு வழிகாட்டிய தேவ பிதாவின் அன்பும்” (அனைத்து வயதுப் பிரிவுகளுக்கும்)

**வயதுப் பிரிவு**

# 10 வயதிற்கு கீழ் பட்டவர்கள் (2025.12.31ஆந் திகதியில் வயது)


# 10 - 15 வயதிற்கிடைப்பட்டவர்கள் (2025.12.31ஆந் திகதியில் வயது)

# 15 - 21 வயதிற்கிடைப்பட்டவர்கள் (2025.12.31ஆந் திகதியில் வயது)

# 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் திறந்த அடிப்படையில் (2025.12.31ஆந் திகதியில் வயது)

**போட்டி நிபந்தனைகள்**

- உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் எந்தவொரு இலங்கையரும் இதில் பங்குபற்றலாம். சித்திரங்களை A4 அளவிலான கடதாசியில் (நீளம் 11.7”மற்றும் அகலம் 8.3”) கிடையாக வரைந்து (A4 – Landscape) அனுப்புதல் வேண்டும்.




- சித்திரத்தின் சுற்றுப்புறத்தில் 1/2”அளவில் இடைவெளி (½அங்குலம் ) இருத்தல் வேண்டும்.
- நிறப் பென்சில்கள் தவிர்ந்த எந்தவொரு ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.
- இது ஒரு போட்டிமட்டுமல்லாது, அச்சித்திரங்கள் முத்திரைக்குப் பயன்படுத்தப்படுமாகையால், அதனை முத்திரைக்கு பொருந்தக்கூடிய விதத்தில் ஆக்குதல் வேண்டும். சித்திரத்தின் இரேகைகள் தெளிவாக இருத்தல் வேண்டும்.
- சித்திரத்தில் நத்தாரின் அடிப்படை அடையாளங்கள் பிரதிபலிக்கப்படுதல் வேண்டும். (உதா: வால் நட்சத்திரம், மாட்டுத் தொழுவம்)
- சித்திரத்தின் மீது எழுத்துக்களை எழுதக் கூடாது.

- சித்திரத்தினை அனுப்பும்போது இத்துடன் உள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து சித்திரத்தின் பின்புறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். உரிய ஆக்கம் தம்மால் ஆக்கப்பட்ட படைப்பு என்பதை ஒரு மதத் தலைவர் / பாடசாலை அதிபர் / ஞாயிறு பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் / அரசு நிர்வாக அதிகாரி ஆகிய எவரேனும் ஒருவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

- ஆக்கங்களை இடும் உறையின் இடதுபக்கமேல் மூலையில் **"நத்தார் தபால் முத்திரை சித்திரப் போட்டி– 2025"** எனக் குறிப்பிட்டு பணிப்பாளர், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், இல 180, 3ம் மாடி, டி. பி ஜயா மாவத்தை, கொழும்பு -10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப முடியும். அல்லது அலுவலக தினங்களில் மு.ப.8.30 தொடக்கம் பி.ப.4.15 காலப்பகுதியில் நேரடியாக கொண்டு வந்து சமர்ப்பிக்க முடியும்.

  - **மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத அனைத்து வரைபடங்களும் நிராகரிக்கப்படும்.**

**வெற்றிபெறும் ஆக்கத்தைத் தெரிவுசெய்யும் விதம்**

- ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் 1, 2, 3 இடங்களுக்கு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

- அதில் வெற்றி பெற்ற **ஓவியங்களில் ஒன்று** கிறிஸ்மஸ் தபால் தலைப்புக்காக தேர்ந்தெடுக்கப்படும்.

- நான்கு வயதுப் பிரிவுகளில் சிறப்பாக வரைந்த ஓவியங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**ஆக்கங்களைத் தெரிவு செய்தல்**

- முத்திரை பணியகத்தின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட நிபுணத்துவ நடுவர் குழாம் ஊடாக தெரிவுகள் இடம்பெறும்.

- போட்டி விதிமுறைகளுக்கு உட்படாத அனைத்து ஆக்கங்களும் நிராகரிக்கப்படுவதுடன், நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானமாக அமையும்.

- தபால் முத்திரைகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட வெற்றிபெறும் ஆக்கங்களில், பணியகத்தின் தேவைப்பாட்டிற்கேற்பவும், முத்திரை தரங்களுக்கமையவும், உரிய விதத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு இணங்குதல் வேண்டும்.

- விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய இறுதித் திகதி :- 2025.10.31

**மேலதிக விபரங்கள் :- தொலைபேசி இலக்கம் : 0112665584**

பணிப்பாளர்,
கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

Christmas Art Competition - 2025

**Application form**

**1.** Full Name (Please write your name in "BLOCK CAPITAL" clearly. This will be used when issuing the certificates) :

2. Name with initials :

3. Mother / Father / Guardian's Name :

4. Private address :

5. Date of Birth

| D | D | M | M | Y | Y | Y | Y |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

6. Telephone Number

Land / Mobile No

Whats App No

7. Select your category

Age under 10 Years ☐

Age 10 to 15 years ☐

Age 15 to 21 Years ☐

Age 21 Years and above ☐

I certify that this drawing has done by the applicant

Signature

Date

Frank